வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 13.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- WAVES உச்சி மாநாட்டினால் ஏற்படும் புரட்சிகரமான வாய்ப்புகள் குறித்து, டாக்டர் ஜெய்சங்கர் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் இன்று உலக நாடுகளின் தூதர்களுக்கு எடுத்துக் கூற உள்ளனர்.
- தமிழக சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர், நாளை தொடங்குகிறது.
- புதுச்சேரியில், அனைத்து மேம்பாலப் பணிகளும் முடிந்த பின்னர், போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும் என்று துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.
- புதுச்சேரியில் தமது அரசு பொறுப்பேற்ற பிறகு, ஜிஎஸ்டி வசூல் உட்பட அரசின் வருவாயும், தனிநபர் வருமானமும், அதிகரித்து இருப்பதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

--------------------------

<u>வேவ்ஸ் மாநாடு (11)</u>

வரும் மே 1 முதல், 4ஆம் தேதி வரை, மும்பையில் நடைபெற உள்ள, உலக மற்றும் கேளிக்கைத் துறைக்கான WAVES உச்சி மாநாட்டினால் சர்வதேச அளவில் ஏற்படும் புரட்சிகரமான வாய்ப்புகள் குறித்து, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோர் இன்று புதுடெல்லியில், உலக நாடுகளின் தூதர்களுக்கு எடுத்துக் கூற உள்ளனர். இந்தியாவிற்கான 100க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதர்கள் இதில் கலந்து கொண்டு, ஊடகம் மற்றும் கேளிக்கைத் துறைக்கான ஒருங்கிணைந்த உலக மேடையாகத்

திகழும் WAVES உச்சி மாநாட்டிற்கான தங்களின் அணுகுமுறைகளையும் வெளிப்படுத்த உள்ளனர். மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட் நவிஸ் ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள்.

-------------------------

<u>கோயல்-டிஜிட்டல் (12)</u>

ஊடகங்களின் உள்ளடக்கத் தேவைகளை உருவாக்குவோர், நாட்டின் டிஜிட்டல் தூதர்கள் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொறுப்பான உள்ளடக்கம், புதுமையான கதை செல்லும் பாணி, திறன் மேம்பாடு, இந்திய படைப்பாற்றலின் ஏற்றுமதி ஆகிய 4 முக்கிய அம்சங்களின் அடிப்படையில், இந்தியப் படைப்பாக்கத் துறை செயல்படுவதாக கூறினார். ஏற்கனவே, பல கோடி டாலர் மதிப்புள்ளதாக மேம்பட்டு, பெரும் எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகளை வழங்கி வரும் இத்துறையில், இன்னும் பல வாய்ப்புகள் கொட்டிக் கிடப்பதாக அவர் கூறினார். படைப்பாற்றலை வெளிப்படுத்தத் தேவையான தொழில்நுட்ப வசதிகளை இளைஞர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகளையே அரசு மேற்கொண்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

-------------------------

<u>ஷப்த் (13)</u>

ஊடகங்களின் உள்ளடக்கத் தேவைகளுக்கான பிரசார் பாரதியின் PB-SHABD ஒலி-ஒளித் தகவல் பகிர்வு சேவை, இன்றுடன் ஓராண்டை பூர்த்தி செய்துள்ளது. ஊடக அமைப்புகள், குறிப்பாக, சிறு ஊடகங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ள இந்த சேவை, 2026 மார்ச் மாதம் வரை, மேலும் ஓராண்டு காலத்திற்கு, இலவச சேவையாகவே தொடரும் என்றும் பிரசார் பாரதி அறிவித்துள்ளது. தற்போது பிரசார் பாரதியின்

ஷப்த் கட்டமைப்பில், ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள், பிரத்யேகமான 60 செய்தி ஆசிரியர் மையங்களின் ஆதரவுடன், 24 மணி நேரமும் விரிவான முறையில் செய்திகளை பகிர்ந்து வருகின்றனர். வேளாண்மை, தொழில்நுட்பம், அரசியல், வெளி விவகாரம் போன்ற 50க்கும் மேற்பட்ட வகைப்பாடுகளில், அன்றாடம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட செய்திக் கட்டுரைகளை, முக்கியமான அனைத்து இந்திய மொழிகளிலும், PB-SHABD வெளியிட்டு வருகிறது.

--------------------------

*யோகா விழா 1* (5)

மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், இன்று புதுடெல்லியில், 11ஆவது சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களுக்கான 100 நாள் கவுன்ட்-டவுன் நடைமுறைகளை குறிக்கும் வகையில், 2025ஆம் ஆண்டு யோகா மகோத்சவ் விழாவை தொடக்கி வைத்தார். அமைச்சரின் உரையில் இடம்பெற்ற சில முக்கிய தகவல்கள்….

(வாய்ஸ்)

*யோகா விழா 2* (11)
(வாய்ஸ்)

ஜுன் 21 சர்வதேச யோகா தினம் வரையிலான 100 நாட்களில், நாட்டின் பல்வேறு இடங்களில், 10 முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று மத்திய அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார். 10 கூட்டாண்மை நாடுகளின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள யோகா பந்தன்-யோகா பரிமாற்ற விழாவும் இதில் அடங்கும் என்று அவர் கூறினார். நாடு முழுவதும் 10 ஆயிரம் இடங்களில், யோகா சங்கம் நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். யோகாவின் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச தாக்கங்கள் குறித்து அமைச்சர் பேசுகையில், தற்போது

உலகெங்கிலும் 30 கோடி பேர், யோகா பயில்வதாகவும், யோகாவினால் உலக மக்களுக்கு பெரும் பயன் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

--------------------------

இஸ்ரோ (17)

விண்வெளித் துறைக்கான அதி நவீன Space Docking தொழில்நுட்பத்தின் மூலம், விண்வெளியில் வைத்தே 2 செயற்கைக் கோள்களை தனித்தனியாக பிரிக்கும் பரிசோதனைகளை, இஸ்ரோ விஞ்ஞானிகள் வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர். SpaDEx இயக்கத்தின் ஒருபகுதியாக எட்டப்பட்டுள்ள முக்கியமான இந்த வெற்றிக்காக, மத்திய அறிவியல் -தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சந்திரயான்-4, ககன்யான், பாரதீய விண்வெளி நிலையம் போன்ற, இந்தியாவின் எதிர்கால விண்வெளித் திட்டங்களை சுமூகமான முறையில் நிறைவேற்ற, வழிகோலுவதாக, இந்த வெற்றி அமைந்து இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். Space Docking தொழில்நுட்பத்தின் மூலம், விண்வெளியில் வைத்தே 2 செயற்கைக் கோள்களை ஒருங்கிணைக்கும் பரிசோதனைகளை, இஸ்ரோ விஞ்ஞானிகள், ஏற்கனவே கடந்த ஜனவரி 16ஆம் தேதி, வெற்றிகரமாக மேற்கொண்டதும், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக, இவ்விரு வல்லமைகளுடன் கூடிய 4ஆவது நாடாக தற்போது இந்தியா மேம்பட்டு உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------

தமிழ்நாடு பட்ஜெட் கூட்டம் (10)

தமிழக சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் நாளை தொடங்குகிறது. நாளைய தினம், மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, வரவிருக்கும் நிதியாண்டிற்கான தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையை, அவையில் தாக்கல் செய்கிறார். இதை தொடர்ந்து அலுவல் ஆய்வுக் குழுக் கூடி, கூட்டத் தொடரை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பதை தீர்மானிக்க உள்ளது. தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை, அனைத்துத் தரப்பினருக்கான பட்ஜெட்டாக இருக்கும் என்று, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். தமிழக சட்டப் பேரவையில், வரவிருக்கும் நிதியாண்டிற்கான வேளாண் பட்ஜெட், நாளை மறுநாள் தாக்கல் செய்யப்படும்.

--------------------------

கைலாஷ்நாதன் (13)

புதுச்சேரி உப்பனாற்றில், விடுபட்டுப் போன மேம்பாலக் கட்டுமானத்தை, 29 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீண்டும் மேற்கொள்ளும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இன்று பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். காமராஜர் சாலை முதல், மறைமலையடிகள் சாலை வரை, உப்பனாற்றில் பாலம் கட்டுவதில் எஞ்சியுள்ள பணிகளும், காமராஜர் சாலையில், பழைய பாலத்தை மறு கட்டுமானம் செய்யும் பணிகளும் இதில் அடங்கும். இப்பணிகள் முடிந்த பின்னர், உப்பனாறு வாய்க்காலில் கடற்கரை வரை பாலம் அமைக்கப்பட உள்ளதாக, துணை நிலை ஆளுநர் தெரிவித்தார். ராஜீவ்காந்தி சிலை முதல், இந்திராகாந்தி சிலை வரை மேம்பாலம் அமைக்க, மத்திய அரசு ஒப்புதல் அளித்து இருப்பதாகவும், அனைத்து மேம்பாலப் பணிகளும் முடிந்த பின்னர், புதுச்சேரியில் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும் என்றும் அவர் கூறினார். துணை நிலை ஆளுநர் மேலும் கூறுகையில்.....

--------------------------

*ரங்கசாமி உரை* 1 (18)

புதுச்சேரியில் தமது அரசு பொறுப்பேற்ற பிறகு, ஜிஎஸ்டி வசூல் உட்பட அரசின் வருவாயும், தனிநபர் வருமானமும், அதிகரித்து இருப்பதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று சட்டப் பேரவையில், துணை நிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், மாநிலத்தின் வளர்ச்சி குறித்து துணை நிலை ஆளுநர், தொலை நோக்குப் பார்வையில் உரையாற்றி இருப்பதாக கூறினாரர. கடன் தள்ளுபடி, மற்றும், நிதிக் கமிஷனில் புதுச்சேரியை சேர்ப்பது குறித்தும், துணை நிலை ஆளுநர் பேசி இருப்பதால், இக்கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேறும் என்று அவர் குறிப்பிட்டார். பெஞ்சல் புயலால் இடிந்து விழுந்த வீடுகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப் பட்டுள்ளதாகவும், பாதிக்கப் பட்டவர்களுக்கு கண்டிப்பாக நிவாரணம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். புதுச்சேரிக்கு மதுபான தொழிற்சாலை கொண்டு வந்தால், அரசுக்கு 500 கோடி ரூபாய் வருமானம் வர வாய்ப்பு இருப்பதாகவும், 5 ஆயிரம் ஆண்கள் மற்றும் 5 ஆயிரம் பெண்களுக்கு இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். இதை கருத்தில் கொண்டே, நீர் ஆதாரங்களை பாதிக்காத வகையில், மதுபான தொழிற்சாலை கொண்டுவர, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், முழு மதுவிலக்கு

*ரங்கசாமி உரை* 2 (6)

சாத்தியமிலலை என்பதால்தான், பாதிப்பு இல்லாத வகையில், வருமானத்திற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். மாநிலத்தில், முதலமைச்சர், தலைமைச் செயலர் மற்றும் அதிகாரிகள் ஒன்றாக செயல்பட்டால்தான், வளர்ச்சி வரும் என்றும், நிர்வாகம் கொஞ்ம் மாறினாலும், வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி மேலும் குறிப்பிட்டார்.

-------------------------

வெளிநடப்பு (17)

முன்னதாக, துணை நிலை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது, உறுப்பினர்கள் அவையில் பேசினர். முதலில் காங்கிரஸ் உறுப்பினர் திரு. வைத்தியநாதன் பேசிய போது, மும்மொழிக் கொள்கையில் புதுச்சேரி அரசின் நிலைப்பாடு என்ன எனக் கேள்வி எழுப்பினார். 1969ல் ஹிந்தியை கொண்டு வந்தது காங்கிரஸ் அரசுதான் என, அமைச்சர் திரு. ஜெயகுமார், திரு. நமச்சிவாயம் ஆகியோர் கூறினர். காங்கிரஸ் மற்றும் திமுக உறுப்பினர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தால், அவையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. சுமார் அரை மணி நேரமாக வாக்குவாதங்கள் தொடரவே, உறுப்பினர்கள் பேசியதை சபாநாயகர் அவைக் குறிப்பில் இருந்து நீக்கினார். இறுதியாக கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் பேசுகையில், மும்மொழிக் கொள்கைதான் மத்திய அரசின் கொள்கை என்றும், விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் புதுச்சேரியில், மும்மொழிக் கொள்கை வந்து வீட்டதாகவும் கூறினார். ஆளுநர் தமது உரையிலேயே இதை குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து, அமைச்சரின் பேச்சிற்கு கண்டனம் தெரிவித்து, காங்கிரஸ் மற்றும் திமுக உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

-------------------------

ஆற்றுக்கால் பொங்கல் (10)

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில், புகழ்பெற்ற ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவில் பொங்கல் வழிபாடு, வெகு விமர்சையாக இன்று நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் பெண்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு, பாரம்பரிய முறையில் பொங்கல் வைத்து, அம்மனை வழிபட்டனர். இதற்கான போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் விரிவான முறையில் செய்யப்பட்டு இருந்தன. ஒற்றுமை, மத நம்பிக்கை மற்றும் கூட்டு வழிபாட்டின் சின்னமாகத் திகழும் ஆற்றுக்கால் பகவதி

அம்மன் கோவில் பொங்கல் விழா, உலகிலேயே அதிக எண்ணிக்கையில் பெண்கள் கூடும் மதத் திருவிழாவாக, கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------

<u>*ரிசர்வ் வங்கி* (6)</u>

தனி நபர்களின் வங்கிக் கணக்கு விவரங்களை ஒருங்கிணைத்து வழங்கும் Account Aggregator நிறுவனங்களின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்யும் சுய ஒழுங்குமுறை அமைப்பாக அங்கீகாரம் பெற, துறை சார்ந்த நிறுவனங்களின் விண்ணப்பங்களை, ரிசர்வ் வங்கி வரவேற்றுள்ளது. PRAVAAH இணைய தளம் மூலமாக, வரும் ஜூன் 15ஆம் தேதிக்குள், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

<u>*ஸ்குவாஷ்* (4)</u>

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் நடைபெறும், ஆஸ்திரேலிய ஓபன் ஸ்குவாஷ் சாம்பியன் பட்டப் போட்டிகளின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்திய வீரர் வேலவன் செந்தில்குமார், இன்று, ஸ்காட்லாந்து வீரரிடம் தோல்வி அடைந்து, தொடரில் இருந்து வெளியேறினார்.

-------------------------

<u>*அமித் ஷா-காந்திநகர்* (12)</u>

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று, குஜராத் மாநிலத்தில் உள்ள தமது காந்தி நகர் மக்களவைத் தொகுதியில், மொத்தம் 146 கோடி ருபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். சாலை, ரயில்வே மற்றும் சுகாதாரத் திட்டங்கள் இதில் அடங்கும். உள்கட்டமைப்பு உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் இந்தியா, குறிப்பிடத்தகுந்த அளவில் வளர்ச்சி அடைந்து இருப்பதாக, நிகழ்ச்சியில்

பேசுகையில் அவர் கூறினார். உலகிலேயே 2ஆவது பெரிய சாலை கட்டமைப்பும், 3ஆவது பெரிய மெட்ரோ ரயில் கட்டமைப்பும் கொண்ட நாடாக இந்தியா தற்போது மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். காந்தி நகரில் புதிய சிவில் மருத்துவமனை கட்டப்படும் என்றும், சனந்த் பகுதியில், 500 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை அமைக்கப்படும் என்றும், உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

--------------------------